செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.01.2019

# செய்தி வெளியீடு
# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : திசெம்பர் 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 திசெம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம் அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 0.4% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 நவம்பர் மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 1.0% ஆக இருந்தது. 2018 திசெம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -2.1%, 2.5% ஆக இருந்த அதேவேளை, 7.3% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 திசெம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 5.7%, 1.6% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 127.7 இருந்து 2018 திசெம்பர் மாதத்தில் 127.1 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2018 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 திசெம்பர் மாதத்தில் 0.6 சுட்டெண் புள்ளி அதாவது -0.5 சதவீதப் புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.17% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.27% இனாலும் குறைவடைந்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, எலுமிச்சம்பழம், பெரிய வெங்காயம், வாழைப்பழம், தேங்காய், மாம்பழம் மற்றும் அண்ணாசிப்பழம் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதி அரிசி, பச்சை மிளகாய், புதிய மீன், பப்பாசிப்பழம், முட்டை, உருளைக்கிழங்கு, பலாக்காய் பலா விதை, கோழி இறைச்சி மற்றும் சின்ன வெங்காயம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 திசெம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்குக் காரணம், 'போக்குவரத்து', 'தொடர்பாடல்' மற்றும் 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்கமருந்துகள்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் குறைவேயாகும். இந்த மாதத்தில் எரிபொருள் விலைகளிலும் (பெற்றோல் மற்றும் டீசல்) பஸ் கட்டணங்களிலும் ஏற்பட்ட குறைவுகள் 'போக்குவரத்து' பிரிவின் செலவுப் பெறுமதியின் குறைவுக்கு காரணங்களாக விளங்கின. அத்துடன், நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் தொலைபேசி கட்டணத்தில் ஏற்பட்ட குறைவு 'தொடர்பாடல்' பிரிவின் செலவுப் பெறுமதியின் குறைவுக்கு காரணமாகும். இருப்பினும், 'ஆடையும் காலணியும்' பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் அதிகரிப்பு பதிவாகியது. மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியதுடன் 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று குறைவு பதிவாகியது. அதேநேரம், 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'சுகாதாரம்', 'கல்வி', மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |
| | ஓகஸ்ட் | 125.4 | -0.9 | 2.5 |
| | செப்ரெம்பர் | 124.4 | -0.8 | 0.9 |
| | ஒக்ரோபர் | 124.9 | 0.4 | 0.1 |
| | நவம்பர் | 127.7 | 2.2 | 1.0 |
| | டிசம்பர் | 127.1 | -0.5 | 0.4 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்